# வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த சட்டங்களுக்குக் கீழான கடமைகள்

வேலைத்தலத்தில் இருப்பவர்களது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பொது நலத்தினை முதலாளிகள் பேண வேண்டும் என்று 'வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு' குறித்த மாதிரிச் சட்டங்கள் வேண்டுகின்றன. இதில் உள்ளடங்குவன:

- சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்து இல்லாத வேலைச் சூழல் ஒன்றை அளித்து அதைப் பராமரித்துவரல்
- தொழிலாலர்களது பொதுநலனிற்காக, அவர்கள் தமது வேலைகளைச் செய்வதற்குப் போதுமான மற்றும் அணுகி அடையக்கூடிய வசதிகளை அளித்தல், மற்றும்
- சுகவீனம் அல்லது காயத்தைத் தடுக்கும் விதமாக, தொழிலாளர்களது சுகாதாரத்தையும் வேலைத்தல நிலைமைகளையும் கண்காணித்து வரல்.

## தொழிலாளர்களுக்கான உங்களது கடமைகள்

உங்களுடைய தொழிலாலர்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டிய தேவை உங்களுக்கு இருக்கிறது. 'கோவிட்-19' நோய்த்தொற்றறை எதிர்கொள்ளும் ஆபத்தினை நீங்கள் அறவே ஒழித்தாகவேண்டும், அல்லது இது சாத்தியமில்லையேல், கூடியவரைக்கும் இந்த ஆபத்தினை நீங்கள் குறைந்தபட்சமானதாக ஆக்கவேண்டும்.

பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம், 'கோவிட்-19' நோய்த்தொற்றினை எதிர்கொள்வதில் இருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றுங்கள், உதாரணமாக:

- வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்
- உடல்ரீதி விலகலையும், நல்ல சுகாதாரப் பழக்கங்களையும் பின்பற்றுமாறுத் தொழிலாளர்களை வேண்டல்

- சுகவீனமாக இருக்கும்போது வீட்டில் இருக்குமாறு தொழிலாளர்களை வேண்டல், மற்றும்
- அவ்வப்போது தவறாமலும், முற்றிலுமாகவும் வேலைத்தலத்தினைச் சுத்திகரிப்பு செய்தல்.

## வேலைத்தலத்திலுள்ள மற்றவர்களுக்கான உங்களது கடமைகள்

வாடிக்கையாளர்கள், சேவைபெறுனர்கள் மற்றும் வருனர்கள் ஆகியோரது சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் உங்களுடைய வர்த்தகத்தில் நடைபெறும் வேலையின் காரணமாக ஆபத்து ஏற்படாமல் இருப்பதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

உதாரணமாக, பின்வருவனவற்றைச் செய்யுமாறு வேண்டுவதன் மூலம் 'கோவிட்-19' நோய்த்தொற்றினை எதிர்கொள்வதில் இருந்து மற்றவர்களைப் பாதுகாக்கவேண்டும்:

- ஒருவரையொருவர் தொடாத விதத்தில் பொருட்களைக் கொண்டுசேர்த்தல் மற்றும் பணம் செலுத்துதல் ஆகியன உள்ளடங்க, உடல்ரீதி விலகலைப் பின்பற்றுதல்
- நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுதல், மற்றும்
- அவசியம் இருந்தால் ஒழிய, வேலைத்தலத்திலிருந்து விலகி இருத்தல்.

## வேலைத்தலத்தையும் அங்குள்ள வசதிகளையும் பராமரிப்பதற்கான கடமை

வேலைச் சூழல்களின் காரணமாகத் தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் 'கோவிட்-19' நோய்த்தொற்று ஏற்படாதவாறு உங்களுடைய வேலைத்தலத்தினை நீங்கள் கட்டாயமாகப் பராமரித்துவரவேண்டும்.

உதாரணமாக, பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் பாதுகாப்பானதொரு வேலைச் சூழலைப் பராமரியுங்கள்:

- அவ்வப்போது தவறாமலும், முற்றிலும் வேலைத்தலத்தினைச் சுத்திகரித்தல்
- உடல்ரீதி விலகலைப் பின்பற்றுவதற்கு இயலுமான விதத்தில் வேலைத்தலத்தின் வடிவமைப்பை மாற்றுதல், மற்றும்
- வேலைத்தலத்திலுள்ள ஆட்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல்.

பின்வருவன உள்ளடங்க, போதுமான வசதிகளையும் நீங்கள் உங்களுடைய வேலைத்தலத்தில் கட்டாயமாக அளிக்கவேண்டும்:

- சோப்பு, தண்ணீர் மற்றும் காகிதத் துடைப்பான்களோடு கூடிய கை-கழுவல் வசதிகள்
- தொழிலாளர்களால் தமது கைகளைக் கழுவ இயலாத நிலைகளில், கைச் சுத்திகரிப்பான் இருக்கும் வசதி, மற்றும்
- சுத்தமான மற்றும் உடல்ரீதி விலகலுக்குப் போதுமான இடம் உள்ள பணியாளர் அறைகள்.

வசதிகளைப் பயன்படுத்துவதற்காக, குறிப்பாகக் கைகளைக் கழுவ, தொழிலாளர்களுக்கு அவ்வப்போது தவறாத இடைவேளைகளைக் கொடுக்கவேண்டும்.

## தகவல்கள், பயிற்சி, அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை அளிப்பதற்கான கடமை

உங்களுடைய தொழிலாளர்களைது வேலையின் காரணமாக அவர்களையும், மற்றவர்களையும் 'கோவிட்-19' நோய்த்தொற்றில் இருந்து பாதுகாக்கத் தேவைப்படும் தகவல்களை அல்லது பயிற்சியை நீங்கள் அவர்களுக்குக் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும்.

இதில் பின்வருவன உள்ளடங்கக்கூடும்:

- கைகளைச் சரியான முறையில் கழுவுதல் குறித்த வழிகாட்டல்

- அவசியமான சரீரப் பாதுகாப்பு சாதனங்கள் எதனையும் அணிவது மற்றும் பயன்படுத்துவது குறித்த பயிற்சி
- எப்படி மற்றும் எப்போது சுத்திகரிப்பு செய்யவேண்டும் என்பதிலான பயிற்சி
- வீட்டிலிருந்து வேலை செய்வதற்கானப் பாதுகாப்பானதொரு இடத்தை எப்படி ஏற்படுத்துவது என்பதற்கான அறிவுறுத்தல்கள், மற்றும்
- சுகவீனமாக இருந்தால், வீட்டில் இருக்கவேண்டும் என்பது குறித்த அறிவுறுத்தல்கள்.

## கலந்துரயாடல்களை மேற்கொள்வதற்கான கடமை

'கோவிட்-19' சம்பந்தப்பட்ட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பைப் பற்றிய விடயங்கள் குறித்து உங்களுடைய தொழிலாளர்களுடன் நீங்கள் கட்டாயம் கலந்துரையாடவேண்டும், மற்றும் அவர்களது கருத்துக்களையும், கரிசனங்களையும் வெளிப்படுத்தத் தொழிலாளர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய கருத்துக்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள், மற்றும் கலந்துரையாடல்களின் முடிவுகளைப் பற்றித் தொழிலாளர்களுக்கு அறிவியுங்கள்.

பின் வருவனவற்றை நீங்கள் செய்யும்போது தொழிலாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுங்கள்:

- ஆபத்து மதிப்பீடு ஒன்றைச் செய்யும்போது
- வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான ஏற்பாடுகள், அல்லது உடல்ரீதி விலகலை உறுதிப்படுத்துவதற்காக வேலைத்தலத்தினை வரையறுத்தல் போன்ற காரியங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற ஆபத்துக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பற்றிய முடிவுகளை மேற்கொள்ளும்போது
- வேலைத்தல வசதிகள் குறித்த முடிவுகளை மேற்கொள்ளும்போது, மற்றும் தொழிலாளர்களுடைய சுகாதாரம் மற்றும் பாதுகாப்பைப் பாதிக்கக்கூடிய மற்ற மாற்றங்களை முன்மொழியும்போது.

ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டக் கலந்துரையாடல் செயற்பாட்டு முறைகளை நீங்கள் கட்டாயமாகப் பின்பற்றவேண்டும். 'சுகாதாரம் மற்றும்

பாதுகாப்பு’ பிரதிநிதிகள் இருந்தால், அவர்களை நீங்கள் கலந்துரையாடலில் கட்டாயமாக உள்ளடக்க வேண்டும்.

## மேலதிகத் தகவல்கள்

‘கோவிட்-19’ மற்றும் வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு Safe Work Australia website - இற்குச் செல்லுங்கள்.